353

[illegible]

நாகூர்

காதர் அவுலியா பேரில் பாடிய

புகழ்ச்சிக் கும்மி.

353/4·1911

இஃது

[illegible]

ஷேக் அப்துல்கரீம் சாயபு அவர்களால்

[illegible]

353 MADRAS
353/4·1911

வாணியம்பாடி

அ. அப்துல்ரஹ்மான் சாயபு அவர்கள்

வேண்டுகோளின்படி

[illegible]

[illegible]

[illegible]

S. A. [illegible] முதலியார்

இவர்களால் பார்வையிடப்பட்டு

வாணியம்பாடி [illegible]

பதிப்பிக்கப்பட்டது.

1911.

இதன் விலை அணா 1.

செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட

[illegible] மாதம் 86 வருடம்

செப்பனிட்டு முடித்த

செப் மாதம் 86 வருடம்

ஆராய்ச்சி உதவியாளரின்
கையொப்பம்.

68534

0-,85

N11

பிஸ்மில்லா ஹிர்றஹ்மாநிர்றஹீம்.

நாகூர் காதர் அவுலியா பேரில் பாடிய

புகழ்ச்சிக் கும்மி.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
4 - NOV 1911
MADRAS.

353/4·1911

காப்பு.

திருவருக் கருள்சேர்நாடு இச — ஜெகமெலாம் புகழும்நாடு
மருமலர் சிறந்தநாடு மறையருள் துலங்கும்நாடு
பெருவள்செறி தஞ்சை நாட்டில் பூமகள் மேவும் நாகூர்
கருணைசேர் வண்மைகூற கர்த்தனும் காப்பதாமே.

நபியருளைப் போற்றி நாவியார் இணையும் வாழ்த்தி
தலைமுன்னே ஒமறுசநர் தாழ்மலர் மலர்ந்து போற்றி
அபிமான வளர் முஹையத்தின் ஆண்டவர் பாதம்போற்றி
சபைசிறந் தருள்சேர் நாகூர் ஸ்தலத்தை நான் புகழ்வேற்றி.

ஆதியாம் அருள்தீன் ஞானம் அமிர்தமே மேலேதனுனம்
நீதியே தர்மதானம் நித்திய கல்யாணமார்க்கம்
மாதவம்சேர் வண்மைகூற மாநிலத்தோர் துதிக்கும்
காதர்மீரு சாகிபும் பாதமும் காப்பதாமே.

வெண்பா.

திருக்குன் றாதினமும் சிந்தையில் நான்மறவேன்
காலமதில் வந்துதித்த எங்கள் — காதர்வலி மீரானை
மக்கா மதீனாவில் வாழும் நபியருள்
மிக்கதொரு நாகூரில் விளங்கும் என் — மீரானை.

கலித்துறை.

ஆதிமூத லாண்டவனே அடியேன் தமிழ்ப்பாடற்கு
நீதிகதி அருளூரில் நின்றுதித்த அல்லுல் பூலக பாஷ்ஷாவை
மக்கால் மென்று மொசால்லி எங்கள் நபி மார்க்கெல்லாம்
பாருலகி லென்னை படைப்பித்த ஆண்டவனே
கிருபையா அடியேனை காதர்வலிமீரு முஹைய்யத்தீனே.

கும்மி.

அல்லாஹு றசூல்நபியென் ஆண்டவரைப் போற்றி - மூன்றில்
அரும்புமலர் சாற்றி, நாகூர் - அருவளரும் மீறுசாஹிபு
தர்காவைப் போற்றி. 1.

நல்லதமிழ் சொல்லிடவே நாயகருள் செய்வீர்
எந்நாளும்துணை செய்வீர் - ஏழை நாவுதனில்
கவிமாலை நல்வசனம் தருவீர். 2.

உத்தமனார் அபூபக்கர் சித்தியரைப் போற்றி
உமர் கத்தாபையும் வாழ்த்தி - இணை உதுமானை
அலியார்பதம் ஓதியணிச் சேர்த்தி. 3.

சித்தமுள்ள ஹசனுசனார் சீர்பாதம் பணிந்து
அனுதினமும்மல ரணிந்து - ஜெய திருநாகூர்
வன்மைசொல்ல குருவருளை கிளைக்க. 4.

வாசமுள்ள கும்மித் தமிழை நேசமுடன் பாட
நின்மதிவளரும் தேட - தினம் மூலையத்தின்
ஆண்டவர்க்கு சலாம்செய்து விளையாட. 5.

ஜாதியினில் கலந்தர்வொலி கருணைசெய்யும் பிரே
கவிமாலில் தெளிவீறே - அருள் கணம்பொருந்தும்
கந்தர்வலி வறமும் தருவீறே. 6.

படிப்புகள் இப்றுஹீம்வலி இடமும் தரவேணும்
பாஸ்பாக்கியம் தரவேணும் - மனம் பதலி வளர்
சிக்கிச்சொலி மகிமைதர வேணும். 7.

பக்தியுள்ள றஹீமத்தொலி சித்தியருள் வேணும்
தமிழ்பாட அருள்வேணும் - பாசபதி தீனர் முஹம்மது
பவுசுதர வேணும். 8.

எத்திசையும் புகழ்ந்திடவே வன்பாவரு ளின்பம்
நீளின்பஜெயமாக திரு - வென்னூரு முதலிசெய்ய
தன்னயமதாக 9.

அம்பியாக்கள் வொலிமார்கள் நம்பன் துணையாக
மதியருள் வசியமாக நல்ல-ஆலிமார்கள் வொலிமார்கள்
மேலுதவியாக 10.

விபரீதமாய் தம்பிரானக்க சவுரியமுண்டாக
கன மேன்மைகளுண்டாக - மேதினியில்
நீடமுடன் மாதவர்களுண்டாக. 11.

நித்தியம்பொரன் ஒலிக்கும் செந்நெல் முத்துவிளையும் நாடு
அன்னசத்திரம் வழங்கும் நாடு - கனநீதி பெருகும்
தஞ்சைநகர் மதிவளரும் நாடு. 12.

முத்திபெரும் தஞ்சைநாடு நித்தியம் கல்யாணம்
நேர்முழுதும் தர்மதானம் - ஆதிமுதன்மையான நாகூர்
பதிதனில் மெய்ஞ்ஞானம். 13.

ஆதியருள் தங்கும் காதர்வொலி பாதம் பணிந்து
பன்னிரத்தர் சல்வா தணிந்து - மதியளருமரும்
நாகூரின் வண்மைசொல்வேன் புகழ்ந்து. 14.

மேதினியெல்லாம் புகழும் வேதவாக்கியம் முழங்க
மேன்மேலும் பாக்யம் துலங்க-வொலிமீருசாஹிபு
மெய்யாக தர்காவில் நிதம் விளங்க. 15.

சபைசிறந்து அருளுயர்ந்து நபிவேதம் தங்கும்
அருள் தயவுடன்பசல் பொங்கும் - தினம் சதகுநெறி
துலங்கிடவே தர்மம் தழைத்தோங்கும். 16.

நபிபெற்ற ஹுசைன்குத்தூசு தயத்தில்வரும் பாலா
திருநாகூர் ஹுசைனா-வொலி நாயகமே மீருசாஹிபு
நலமுள்ள சீருளர் 17.

மாணிக்க புவியில் பிறந்த ஞானப்பொருளாகும்
தினம்வளரும் குருவாகும்-வளர்ந்து தினம் சேர்ந்து
வாதவொலியாரும். 18.

டல்லியனிக வாக்கு உச்சிதாஹும் தாவாக
நபியுரைத்த மொழியாக - நாகூர் தனிலே
ஏருசெய்யும் நேருன்றி செழிப்பாக. 19.

நீறுக்கு குணவாகியின் சுபிட்சம் பெருகி மகிழ்ந்தச்
சுபிட்சம் மிகுந்தச் - நல்ல நித்ய நாகூர் தனிலே சாஹிபு
சிறந்து உயர்ந்திடவே. 20.

வாசிலுச் புகழும் நாகூர் சாஹிபானும் வேதர்
பள்ளிவாசல் நற்பாகம் - வளர் வண்ணம் மேலுறும் சாஹிபு
ஆம்மொலி தர்கா. 21.

நீண்டு நின்று முழக்கிடவே நேயம் விளங்கிடவே நகர்
சிறந்து வளர்ந்திடவே - நீசேது சரூப்சாஹிபு
தினமும் துலங்கிடவே. 22.

சாந்தமதி போல்மனோர ஜோதியும் வளர்ந்திடவே
கனம்பொருந்தி உயர்ந்திடவே - இந்த காசினியில்
நாகூரில் பூவாசம் விளங்கிடவே. 23.

தங்கத்திலும் கொடிமரங்கள் எங்கும் பிரகாசம்
கனம் சாந்துபன்னீர் வாசம் - நல்ல ஸ்தானமாயுள்ள
நாகூரில் சுலைமான் விலாசம். 24.

சிங்கார மேடைகளும் தங்கப்பூமாலையும் கனசெம்
பொன்னிலையாகும் - நல்ல சிறந்தவெள்ளி நிறைந்
திருக்கும் செம்பொன்கதவாகும். 25.

வச்சிரத்தால் தூண் கட்டி பச்சைகளை பூட்டி
மணி மரகதங்கள் சூட்டி - வைடூரியத்தால்
மதிமுகங்கள் நாட்டி. 26.

உச்சிதமாய் ஜனங்கள் வெகு சித்திரம் பாராட்டி
கபிவைர்பசம் சிரட்டி - நல்ல உத்தமனார் மீது
சாஹிபா சித்தனிலேயாட்டி. 27.

புஷ்பமலர் மேற்சடுனில் பொற்பிரகாசம் மீட்டி
நல்ல பொருந்த தொங்க விட்டு - போதகவாய்
நிலக்கண்ணாடி பூட்டிவைய விட்டு. 28.

கற்பனைடய கொடிமரங்கள் கற்பகத்தால் நாட்டி
கலரத்னபாலை சூட்டி - மக்கப் நகர தமேபால்
துலங்கிடவே நாகூர்வான் காட்டி. 29.

பூத[illegible]ர் பள்ளிவாசல் [illegible] ஐசுவரிய முண்டாக
பள்[illegible]வாசலுக்குண்டாக - ஜன பாக்கியமும்
சௌபாக்கி[illegible] ஆரோக்கியமுண்டாக. 30.

அபிஷேகம் [illegible] நாகூர் புளியும் தழைத்தோங்க
மனுருவும் செழித்தோங்க - இன் யாபு சாஹிபு
சல்தான் கொடி கைக்கூழுதாம் இலங்க. 31.

சந்திரஒளி போல்மனோர ஜோதிம் வளர்ந்திலங்க
அருள் தங்கி வென்றும் இலங்க - நகர் தஞ்சை மகா
ராஜன் கொடி தகதகவென்றிலங்க. 32.

கந்தூரி கொடியேற்றி ஒக்கையமகிழ் வோரும்
புறைதண்டு புகழ்வோரும் - தீர்கனிமா செல்வீ
காதர்வொலி பாதம்பணிவோரும். 33.

வைபவம் புகழுமன்னர் சையதுமார் சாஹிபு
தின் மார்க்கமுள்ள சாஹிபு-சேக்குமார்கவிட
மரைக்கமார்கள் வலியமுள்ள சாஹிபு. 34.

வையால் கிசம்தொழுக செய்புகழ் சொல்வோரும்
இந்த காசினியில் வல்லோரும் - எங்கள் காதர்மீரு
சாஹிபுவொலி பாதம்பணிவோரும். 35.

சேக்குமீரு சாஹிப[illegible]களும் தினமும்தொழுதிடவே
இந்த ஜெகமும்புகழ்ந்திடவே-சிக்கந்தர்மீரு சாஹிபு
துரை சந்தியும் விளங்கிடவே. 36.

சாந்[illegible] வண்மை சொல்ல [illegible] நாயன் செயலாகும்
மக்கா[illegible] நபிவேத மாகும் - இந்த நகர்புதுமை அதிசயங்கள்
சொல்லமிளமை சாலும். 37.

ரத்தினமணி மண்டபங்கள் சித்திர விஸ்தாரம்
திருநகை அலங்காரம்- ஜமாஅத்து அதிகாரமுள்ள
பள்ளிவாசல் சிங்காரம். 38.

வெற்றி சிரும் பக்கீர் சாஹிபு உத்தமம் கொண்டாடி
சூடு விஸ்தாரம் பாராட்டி - திரு மேடைமீதில்
பதுவிருந்திடவாருனோர் வினையாடி. 39.

பல்லிரிகள் வைத்தேசதி நிகரம் சக்கரை ... ழுங்க
நிலம் பாத்தியாசெசால்லி ருபுள்ள-வெகு ... யுள்ள
வெகளிபாதம் சித்திர ... விளங்க. 40.

திக்கிலுள்ள ராஜமன்னர் த... க வந்திடவே
சலாம்செய்து பணிந்திடவே - நல்ல திரேணர்கள்
தீன்தர வானேர்கள் மகிழ்ந்திடவே. 41

ஆண்டவர் சன்னதி பார்க்க ஆயிரங்கள் வேணும்
வெகு அதிசயங்கள் தோணும்-நிதம் அதிக தர்மம்
விளங்கு நாகூர் பதி மகிமை காணும். 42.

அண்டாமணி விளக்கு வேண்டியது தீபம்
ஜெகஜோதி சதா - கோடிமதி போல் துலங்கு
வெகு தீபம். 43.

பத்தா பத்தாதிசெயல் விளக்கேற்றிவைத்த தீபம்
நல்ல பகல்வத்திபோல் ரூபம - நல்ல பார்புகழும்
பள்ளிவாசல் சேர்பொருந்தும் தீபம். 44.

ஏற்றமுள்ள தீபம்திரு நேர்த்தியாக தோணும்
நச்செரங்கும் மேன்மை காணும்-அதில் நருஸ்கபீ
அருள்பெருகும் வெளிமகிமை காணும். 45.

தஞ்சாஞ்சேர் தஞ்சாவூ சேர்ந்தாமரை துலங்க
இத்தரணி யெங்கும் துலங்க - வெகு சவுரியமாய்
துரைமன்னர் சபையிலாச மிலங்க. 46.

சந்திரவாணம் பெரிபாணம் சிங்கையுடன் போட
ஆயில் சேர்ந்துமகிழ்ச் தாட - நல்ல சக்கிரவாண
காக்ஷிவெகு மிச்சிதமாய்ப் போட 47.

தேர்வாணம் அதிர்வாணம் ஜெயமுடனே கொ...
நல்ல சுகமுடன் பிரகாசி - நல்ல நாகசுர மத்தள
சங்கீதம் தொனிக்க. 48.

பேர்பெரிய பேரிகைதொனி வாகிபொனி போலும்
மனைமாரி தொனிபோலும் - வெகு பெருக்கமுடன்
செர்ச்சிக்கவே சிறக்கவே மென்மேலும். 49.

சங்கீத புத்தகல்வி தமிழ்வாணர் சொல்ல அருள்
சவுரிய முன்னி புலவர் - வாணர் சகலகலையான
வேத சாஸ்திரங்கள் சொல்ல 50.

மங்களஞ்சேர் ...ரியோர்கள் வந்துதொழுதிடவே
சந்தமகிமைமக்கள் கொண்டிடவே - நீண்மார்க்கமுள்ள
சாருசெரி வாக்கியம் முழக்கிடவே. 51.

மன்னர்மது மன்னியர்கள் வருவார்கள் கோடி
வந்து பணிவார்கள் கோடி - அவர் மனதுதனில்
நினைத்தபடி வரமபெருவார் கோடி. 52.

வர்ணனைப்போல் சொர்ணதானம் கவிழ்ந்திடுவார் கோடி
நின் கவிமாசொல்வார் கோடி - வெகு காணிக்கைகள்
தந்துவெகு கனம்பெருவார் கோடி. 53.

தனம்பிருந்த நாகூரில் கனம்பொருந்தும் வாசம்
இருசன்னதி விலாசம் - சொக்ஷி தர்காவில் மனருவின்
சாம்பிராணி வாசம். 54.

68594

தினமும் பன்னீர் மழைமென வனிதையர்கள் ஆட
மயிலினமும் விளையாட - நல்ல திவட்டிகள் மத்தாபுகள்
பகல்வத்திகள் போட. 55.

முத்துக்குடை பவளக்குடை விஸ்தாரமாய்ப் போட
நவரத்னகிழ லாட - ஆதி முஹம்மதருள் பெருகும்
நாகூர் மகிமைதனை பாட. 56.

வெற்றிக்கொடி இடக்கையங்கள் மென்மேன்மை துலக்
கிடவே வெகு விருதும் விளங்கிடவே - நல்ல வெள்ளிதடி
கார்முகம் விலாசம் விளங்கிடவே. 57.

சந்தனகூடு ஐம்பொன்னிறம் மாரும் பசும் தங்கம்
உயர் சாந்து பன்னீர் வாசம் - கன சந்திரன்போல்
அழகுயர்ந்த சவுரியங்கள் அழகும். 58.

சந்தனங்கள் பங்காக்களும் தனிஸ்வாசமாகும் இன
கர்த்தன் செயலாரும் - என்ன காரணத்தை சொல்வேன்
கலைமதிபோல் வடிவாகும். 59.

நாகப்பட்டணம் கூடெழும்பி நகர் வீதியில் வருக வெகுவி
நாயகமே அருள் பெருக - மகாராஜமன்னர் வரிசை
விசுவாசமுடன் வருக. 60.

மேகவஜ்ஜிர சந்தனமும் ஏகாந்த [illegible] பொறிய வெகு
திரவியம்பொன் விளைய - நல்ல செப்பிரதியாய் பச்சை
தண்ணீர் விளக்கொளிர [illegible]. 61.

ஆணிப்பொன் விளங்கும் நாகூர் தர்காவும் வலமாக
மன்றுவும் செழிப்பாக - நல்ல ஆலிபாரம் பவுத்திரும்
வாழ்வு ஜெயமாக. 62.

வாணியர்கள் தெருவில் நிஜம் தோரணங்கள் கட்டி
கண மருக்கொழுந்தும் நட்டு - முல்லைமலராலே பந்த
லிட்டு, வளமையுடன் சீராட்டி. 63.

திம்திமென பேரிகைகள் அடியாய் முழங்கிடவே
இந்தபடியும் விளங்கி தேவ - நல்ல தீவட்டிகள் பகல்வத்திகள்
சுவட்டங்கள் போட. 64.

வடிவுடனே கூடுவெகு திடமுடனே வருக
அதில் முகம்மதருள் பெருக - வொலி வரம்பிருக்க
நாகூரில தெருவில் வலமாக. 65.

மருமலர்கள் கமகமென பரிபூரணமாக
நல்ல குருமொழி யன்பாக - லெணி வாணியர்கள்
தெருவில் கூடுவந்து பதிவாக. 66.

அருள்விலாசம் சிறந்துயர்ந்த அந்தரம்போலாக
வொலி சிந்தைமகிழ்வாக - வெகு அன்புடனே
கூடெழும்பி இன்பமுடனே. 67.

வாணவேடிக்கைகள் பெருகிதம் போராட
பரிவசனர்கள் நின்றாட - நல்ல வடிவுத்திரும்
ஒட்டகைகள் நடங்குழைவெயிலாட. 68.

ராஜேந்திரர் செறுக்கிவர் மேன்மை வளர்ந்தேற
நல்ல திரேஜர்கள் நின்கூற - திருநாகூரில் சந்தனக்கூடு
ஏகாந்தமாய்ச் சேற. 69.

றத்தினம் விளைந்துயர்ந்த நித்தியம் கலியாணம்
என்னாளும் தர்ம்மதானம் - திருநாகூர்மீரு சாஹிபு
தர்காவிலே மெய்ஞ்ஞானம். 70

சத்திவளம் தர்காவை பக்தியுடனே போற்றி
நல்லதமிழ் சொல்லிடவே நேர்த்தி - வேத சாஸ்திரங்கள்
பார்த்து மனாருவை நிதம் வாழ்த்தி. 71

பக்தியுடன் பணிந்திடவே பாக்கியமுண்டாகும்
தன யோக்கியமுண் டாகும் - நல்ல பால்பழமும்
சர்க்கரையும் தேனமிர்தமுண் டாகும். 72

உத்தமன்போல் பதினாறு புத்திரருண்டாகும்
வொளி உதவிகளுண்டாகும் - இந்த உலகமெங்கும்
நினைந்திடவே பதவிகளுண்டாகும். 73

மென்மேலும் திருமகிழ விலாசங்கள் உண்டாகும்
விசுவாசங்களுண்டாகும் - வெகு விற்பனம்சேர்
தமிழ்பாட நற்புகழுண்டாகும். 74

செம்மையுடன் செம்பாக நன்மைகள் உண்டாகும்
வெகு தர்மங்கள் உண்டாகும் - நல்ல தேசமெங்கும்
புகழ்ந்திடவே நேசவகை யுண்டாகும். 75

நாகரீகமான தஞ்சை நாட்டில் வலமாகும் நல்ல
நகரிதுவே யாகும் - வெகு நலமுடைய நாகூரு
ஸ்தளமிதுவே யாகும். 76

வாகுடைய வன்மைசொல்ல தொகையெல்
லோரும் ஒரு வரிசையாக சேரும் - மாதவஞ்சேர் நாகூர்
வீதிவழி வாரும். 77

பாக்கியமே வசியமுள்ள யோக்கியப் பெண்
ணாளே நல்ல - பருவத்தில் கிளியான
குருவதப் பெண்ணாளே. 78

மார்க்கமுள்ள சாருநெறி பார்க்கவேணும் பெண்ணே
பள்ளிவாசலைப் பார் கண்ணே - ஐந்து மனாருவைப்
பணிந்துநிதம் மகிழ்ந்திடலாம் பெண்ணே. 79

திங்கள்வதன மாயிலங்கும் சங்கீர்த்தனங்கள் பாடி
ஒயில் சேர்ந்துமகிழ்ந் தாடி - வளர் திருநாகூர்
மீரு சாஹிபு அருள்மகிமை தேடி. 80

மங்களம் சேர் கவிபாடி சங்கையில் நீராடி
அசல் மஞ்சளும் நீராடி - நல்ல மங்கையர்கள்
இங்கிதமாய் வரிசையுடன் கூடி. 81

முத்துவர்ணசேலையும் உங்கள் சித்திடையில் கட்டி
ஒயில் விஸ்தாரம் பாராட்டி - மதி முகமிலங்கும்
பணியணியாய் சுகமுடன் சீராட்டி. 82

அத்தர்சவ்வா தணிந்து முல்லை அரும்புமலர் சூட்டி
மயில் அன்னநடைக் காட்டி - நல்ல அமிர்தருண
அருவையர்கள் சரிகைவளை பூட்டி. 83

முன்கை முதாரியிட்டு தங்க வளையல் தொட்டு
விரல் மோதிரங்களிட்டு - நல்ல மூக்குத்திகளிட்டு
வஜ்ஜிர முருகுதொங்க விட்டு. 84

மங்கையர்கள் இருஸ்தனத்தில் ரவிக்கைகமலரிட்டு
மதிருப்போல் அழகிட்டு - கனிருள்ள கிளிமொழியார்
விழிதனில் மையிட்டு. 85

மாணிக்கத்தால் ஆணிப்பொன் வெண்பணிகள் சூட்டி
முத்துமாலைகளும் பூட்டி - உங்கள் மார்பிலங்கும்
வயிரமணி கோர்வைகளும் பூட்டி. 86

வேணச்செல்வம் மிகுந்த நாகூர் வீதிகளைப் பாரும்
உங்கள் பிணிகளெல்லாந் தீரும் - வேடிக்கையாய்ப் பதம்பாடி
விளையாடி வாரும். 87

சந்தனம் சவ்வாது பன்னீர் கெந்தபொடி பூசி
வெகு தந்திரங்கள் பேசி - வொளி சந்தனகூடு
பார்க்க வந்தமகராஜி. 88

சிங்கையுள்ள மனோஹரவ சந்திரவொளிவு பாரும்
கண்ட வீதியில் பாணம்வாரும்-ஒலீமீரு சாஹிபு பள்ளிவாசல்
வீதிவழி வாரும். 89

வேல்விழியார் குயில் மொழியார் மெல்லியரெல்லோரும்
இந்த மேதினி நல்லோரும் - விந்தையுள்ள கடைவீதியில்
இருந்த தவனம் பாரும். 90

பால்தயிர் பலாக்கனி மென்மேலும் கடை பாரும்
பால் பாக்கியமே சேரும் - ஒலி பாதங்களை
பணிந்திடவே மாதர்களே வாரும். 91

குணமுடைய பெண்களெல்லாம் மனமகிழ்ந்து கூடி
ஒலி குத்துபு அருள் தேடி - கோலை நாகம்போல
கூடி விளையாடி. 92

மனமுவப் பணிந்த இரட்டைக் கிணறுதனைப் பாரும்
வெகு வடிவுள்ள பெண் சேரும் - மார்க்கமுடன் ஒலிவு
செய்து யோக்யமுடன் வாரும். 93

ஸ்தல மகிமை பெருமை சொல்ல நிலாவுகளைப் பாரும்
மதி வடிவுள்ள பெண் சேரும் - சமது குறைகளெல்லாந் தீரும்
நாகூர்பதி பவுசுதங்கும் மேன்மையுடனே வாரும். 94

லோகமெங்கும் புகழும் நாகூர் ஒலிபாதம் பணிவீர்
மனது உகந்து நிதம் வாழ்வீர் - உத்தமியாள் பவுசுதங்கும்
புத்திரனைப் பெறுவீர். 95

தோகையரே சுகப்பெறுவீர் மோகனப்பெண்ணுரே
சுபசோபனப் பெண்ணுரே - சுத்தமுடன் வாழ்ந்திடலாம்
உத்தமப் பெண்ணுளே. 96

நாலைகவளர் பள்ளிவாசல் நாகரீகம் பாரும்
ஒலி நாருசாயிந்தாரும் - ஒலிநவிளமுள்ள பிரேடம்
வண்மை பார்க்க வாரும். 97

பாரும் வளம்சேரும் பள்ளி பிரெழும்பும் நேரம்
சபை பார்த்திட விஸ்தாரம் - ஜடை பக்கிரி சாடபுகள்
மிக்கவே அஜாரம். 98

சீர்வளரும் நதிக்கரையில் பிரேடம் பாரும்
கெங்கை சிறந்த அலையில் சேரும் - செய்யளமார்
தாகம் தீர்ந்து ஒய்யாரமாய் வாரும், 99

அன்புடைய அப்தறகா முன்பாக தானே
வெகு இன்பம் கிருபானை - தகதகென மலர்கள் தன்னை
வாரியுண்ணும் வசந்தேனே. 109

வாழி.

ஆயிரத்தெண் மலருடைய ஆண்டவனே வாழி
அந்த அறிவுதனை எதிர்பார்க்கும் அடியார்கள் வாழி
நீண்டபுகழ் பெற்றிலங்கும் நெடியோனே வாழி
நிர்மலமாய் நின்றிலங்கும் நாகூர் நித்தியமே வாழி
அன்புடைய நாகூர்தனில் அனைவர்களும் வாழி
தீன் அசனுசனும் வாழி இதை பாடினோரும் வாழி
பிழை திருத்தி அச்சியிற் பதிப்பித்தோரும் வாழி
தீனோர்கள் வாழி தேசமெங்கும் வாழி
கேட்டோர்கள் வாழி கிளைகளும் வாழி
கனமேன்மையுள்ள காதறொலி தாழ்மலரும் வாழியே.

68534